இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 02-08-2025

# கடம்பூர் ராஜீ கக்கிய உண்மை!

“1999 ஆம் ஆண்டு சுப்பிரமணிய சுவாமியின் தவறான வழிகாட்டுதலால் பா.ஜ.க. ஆட்சியைக் கவிழ்த்து பெரும் வரலாற்றுப் பிழையைச் செய்துவிட்டோம்” - என்று ஜெயலலிதா எடுத்த அன்றைய நிலைப்பாட்டை விமர்சித்துப் பேசி இருக்கிறார் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜீ.

‘நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை’, ‘இந்த அர்த்தத்தில் சொல்லவில்லை’ என்று அவர் மழுப்பினாலும், அவருக்குள் தூங்கிக் கொண்டிருக்கும் ‘சங்கி’ முழித்துவிட்டது என்பதே உண்மையாகும். ஜெயலலிதாவையே விமர்சிக்கும் நிலைக்கு பா.ஜ.க. பாசம், பழனிசாமி கூட்டத்துக்கு அதிகமாகி வருகிறது.

திராவிடம், பேரறிஞர் அண்ணா ஆகிய பெயர்களுக்கு இழுக்கு வரும் போதெல்லாம் வாய்மூடிக் கிடந்தவர் பழனிசாமி. ‘திராவிடம்’ என்பதை விமர்சித்தார் ஆளுநர் ரவி. இது பற்றி நிருபர்கள் கேட்டபோது, ‘எனக்குப் புராணம் எல்லாம் தெரியாதுங்க’ என்று பதில் சிரிப்பு சிரித்தார் பழனிசாமி. பெரியாரையும் அண்ணாவையும் திராவிடத்தையும் கொச்சைப்படுத்தி மதுரையில் ஒரு மாநாட்டில் காட்சிப்படம் ஒளிபரப்பினார்கள். அந்த மாநாட்டுக்கு தனது அமைச்சரவையில் இருந்த கொத்தடிமைகள் நான்கு பேரை அனுப்பி வைத்தார் பழனிசாமி. இந்தித் திணிப்பை நியாயப்படுத்தி உள்துறை அமைச்சர் அமித்ஷா ஒரு கருத்தைச் சொன்னார். ‘அது அவரின் சொந்தக் கருத்து’ என்று பதில் சொன்னார் பழனிசாமி. இப்படி மொத்தமாக திராவிட இயக்கக் கொள்கைகளைப் பலியிட்டு வந்தார் பழனிசாமி.

பழனிசாமியை விட தான் ‘பெரிய சங்கி’ என்பதை வேலுமணி மெய்ப்பித்து வருகிறார். அதற்கு தானும் சளைத்தவனல்ல என்று காட்டத் தொடங்கி இருக்கிறார் கடம்பூர் ராஜீ. பா.ஜ.க. ஆட்சியைக் கவிழ்த்து பெரும் பிழையைச் செய்தாராம் ஜெயலலிதா. 26 ஆண்டுகள் கழித்து கடம்பூர் ராஜீ இதைக் கண்டுபிடித்திருக்கிறார்.

1999 ஆம் ஆண்டு பா.ஜ.க. ஆட்சியைக் கவிழ்த்தார் ஜெயலலிதா. அது ஏதோ அவசரத்தில் அவர் எடுத்த முடிவல்ல என்பதை பின்னர் ஒரு கூட்டத்தில் பேசும் போது, அதனை உறுதி செய்து பேசினார் ஜெயலலிதா.

“முன்பு ஒரு தவறு செய்து விட்டேன். பி.ஜே.பி.யோடு தேர்தல் கூட்டணி வைத்துக் கொண்டேன். நான் செய்த தவறை ஒப்புக் கொள்ளும் தைரியம், துணிச்சல் எனக்கு என்றைக்கும் உண்டு. அந்தத்தவறுக்குப்பரிகாரமாகத்தான்நானேபி.ஜே.பி. ஆட்சியைக் கவிழ்த்தேன். இனி எந்தக் காலத்திலும் பி.ஜே.பி.யோடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டணி வைத்துக் கொள்ளாது” - இதுதான் ஜெயலலிதா சொன்னது ஆகும்.

வரலாற்றுப் பிழை அல்ல, தன்னைப் பொறுத்தவரையில் இதுதான் நிலைப்பாடு என்பதில் ஜெயலலிதா உறுதியாக இருந்தார். ‘மோடியா? லேடியா?’ என்று கேட்டவர் ஜெயலலிதா. ‘குஜராத் மாடலை விட, அ.தி.மு.க. ஆட்சியே சிறப்பானது’ என்றார் ஜெயலலிதா. அதேபோல் ஜெயலலிதா ஆட்சியை கடுமையாக விமர்சித்தார் பிரதமர் மோடி.

**2016 சட்டமன்றத் தேர்தலின் போது ஜெயலலிதாவுக்கு எதிராகத்தான் பிரதமர் மோடி பேசினார். “பா.ஜ.க.வுக்கு அனைவரும் வாக்களியுங்கள். ஒவ்வொரு முறையும் அம்மாவிடம் (ஜெயலலிதா) கோபித்துக் கொண்டு அய்யாவுக்கு (கலைஞர்) வாக்களிப்பீர்கள். அல்லது அய்யாவிடம் கோபித்துக் கொண்டு அம்மாவுக்கு வாக்களிப்பீர்கள். மாற்று சக்தி இல்லை. ஒரு முறை கிணற்றில் விழுந்தால் அடுத்த முறை ஏரியில் விழுவீர்கள். இப்போது பா.ஜ.க. என்ற மாற்று சக்தி உங்களுக்குக் கிடைத்து விட்டது. இப்போதைய ஆட்சியில் (அ.தி.மு.க.) லஞ்ச லாவண்யம் தலைவிரித்தாடுகிறது. தமிழ்நாடே இதனால் பாதிக்கப்பட்டு விட்டது. லஞ்சம் வாங்குபவர்கள் (ஜெயலலிதா) கையில் ஆட்சி இருக்கிறது” என்று பேசினார் அன்றைய மோடி.**

**“இந்தியாவிலேயே மிகப்பெரிய ஊழல் ஆட்சி ஜெயலலிதா ஆட்சிதான்” என்று அமித்ஷா பேசினார். இதனை எல்லாம் பழனிசாமி அண்ட் கோ மறந்திருக்கலாம். மக்கள் மறக்கவில்லை.**

சம்பாதித்ததையும் சம்பந்தியையும் காப்பாற்றுவதற்குத்தான் பா.ஜ.க. பக்கம் சாய்ந்திருக்கிறார் பழனிசாமி. அவரே கேட்பது போல, ‘அவர் யாரோடு கூட்டணி வைத்தால் நமக்கு என்ன?’ அதற்காக, ஜெயலலிதாவையே தூக்கி எறியத் துணிந்ததுதான் கவனிக்கத்தக்கது. சசிகலாவுக்கு ஒழுங்காகக் கப்பம் கட்டியதால் முதலமைச்சர் நாற்காலியைப் பெற்ற பழனிசாமி, சசிகலா சிறைக்குப் போனதும் ‘நீ ஏன் உரிமை கொண்டாடுகிறாய்? உனக்கும் அ.தி.மு.க.வுக்கும் என்ன சம்பந்தம்? நீ எங்களுக்கு பதவி வாங்கித் தந்தாயா?’ என்று ஒருமையில் நாவடக்கம் இல்லாமல் சவடால் விட்டதையும் தமிழ்நாடு மறக்கவில்லை. நன்றிகெட்டதனம்தான் பழனிசாமியின் குணம் என்பதை நம்மைவிட அ.தி.மு.க.வினர் அதிகமாக அறிவார்கள்.

**பழனிசாமி இருக்கும் தைரியத்தில்தான் கடம்பூரார் உளறுகிறார். ஜெயலலிதா உயிரோடு இருக்கும் போது கடம்பூர் ராஜீ இதைச் சொல்லி இருந்தால் ஆடிட்டர் ராஜசேகருக்கும், தூத்துக்குடி ரமேசுக்கும் ஏற்பட்ட கதி தான் இவருக்கும் ஏற்பட்டிருக்கும் என்பதை இப்போது நினைவூட்டுவது தவறல்ல.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.8.2025) முகாம் அலுவலகத்தில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் சந்தித்து, உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். இச்சந்திப்பின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ மற்றும் நிருவாகிகள் உடனிருந்தனர். இச்சந்திப்பையடுத்து, இதுகுறித்து வலைதளப் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், **“என் நலம் விசாரித்து அன்புகொண்டு பேசிய அண்ணன் வைகோ அவர்களுக்கு நன்றி!”** என்று குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (31.7.2025) முகாம் அலுவலகத்தில், முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் சந்தித்து, உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். இச்சந்திப்பின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ரவீந்திரநாத், கோபாலகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர். பின்னர் ஓ.பன்னீர் செல்வம் அவர்கள் சந்திப்பு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில், **‘உள்ளன்போடு உரையாடி உடல்நலம் விசாரித்ததற்கு நன்றி!’** என்று குறிப்பிட்டுள்ளார்.

## பாளையங்கோட்டையில் கொலை செய்யப்பட்ட

# ஐ.டி.ஊழியர் குடும்பத்திற்கு நேரில் ஆறுதல்!

## அமைச்சர் கே.என். நேரு – கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்தனர்!

தூத்துக்குடி, ஆக.2-

ஆணவப் படுகொலை செய்யப்பட்ட கவின் செல்வகணேஷின் வீட்டுக்கு கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என். நேரு, நாடாளு மன்ற கழக குழுத் தலைவர் - கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் சென்று கவின் பெற்றோருக்கு ஆறுதல் கூறினர்.

தூத்துக்குடி மாவட்டம், பிரையன்ட் நகரை சேர்ந்தவர் சந்திரசேகர். இவரது மகன் கவின் செல்வகணேஷ் (வயது 27). மென்பொறியாள ரான இவர், சென்னை துரைப்பாக்கத்தில் உள்ள பிரபல ஐ.டி. நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். கவின் செல்வகணேஷ் தனது பள்ளித் தோழி யான சித்தா டாக்டர் சுபாஷினி என்பவரை காத லித்து வந்துள்ளார்.

பள்ளிப் பருவம் முதல் காதல் என்பதாலும், இரு வேறு சமூகத்தினர் என்பதால், மணிமுத்தாறு தமிழ்நாடு சிறப்பு காவல் படை பிரிவில் பணி யாற்றி வந்த சுபாஷினியின் பெற்றோரான எஸ்.ஐ. தம்பதி சரவணனும், கிருஷ்ணகுமாரியும் -இக் காதலுக்கு ஒப்புக்கொள்ளவில்லை. இருந்தா லும் அவர்களின் ஒப்புதலுக்காக பல ஆண்டுக ளாக காத்திருந்தனர்.



இதற்கிடையே, கவின் செல்வகணேஷ் தனது தாத்தாவை சித்தா டாக்டரான காதலி சுபாஷினியிடம் கடந்த 27-ஆம் தேதி திருநெல்வேலிக்கு அழைத்து வந்துள்ளார். அப் போது சுபாஷினியின் தம்பி சுர்ஜித் (வயது 21), கவின் செல்வகணேஷிடம் பேச வேண்டும் என்று தனியாக அழைத்துச் சென்று ஆணவக் கொலை செய்யும் நோக்கில் கொடூரமாக கத்தி யால் வெட்டி படுகொலை செய்துள்ளார்.

இது தொடர்பாக பாளையங்கோட்டை போலீ சார் வழக்குப்பதிவு செய்து கவின் செல்வக ணேஷை படுகொலை செய்த சுர்ஜித்தை கைது செய்தனர். மேலும் ஆணவக்கொலைக்கு கார ணமான சுபாஷினியின் பெற்றோரும், உதவி ஆய்வாளர்களுமான சரவணனையும், கிருஷ் ணகுமாரியையும் சஸ்பெண்ட் செய்து தமிழ்நாடு சிறப்பு காவல் படை டி.ஐ.ஜி. விஜயலட்சுமி உத்த ரவிட்டார்.

இந்நிலையில், தமிழ்நாடு டி.ஜி.பி. சங்கர் ஜிவால், ஐ.டி. ஊழியர் கவின் செல்வகணேஷ் ஆணவக்கொலை வழக்கை பாளையங் கோட்டை காவல் நிலையத்தில் இருந்து சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றி உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில், கவினின் வீட்டுக்கு கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என். நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் - கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் நேரில் சென்று கவினின் பெற்றோருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

குற்றம் செய்த அனைவரின் மீதும் நடவ டிக்கை எடுப்பதில் முதலமைச்சர் உறுதியாக இருப்பதாக கவினின் பெற்றோரிடம் கனிமொழி கருணாநிதி தெரிவித்தார்.

**கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!**

பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய கனிமொழி கருணாநிதி கூறியதாவது:-

**பெற்றோர்கள் தங்களது இளம் மகனை பறிகொடுத்துள்ள நிலையில் அவர்களுக்கு ஆதரவாக நிற்கிறோம். முதல்வர் சார்பில் பாதிக்கப்பட்ட பெற்றோரை சந்திக்க வந்திருக்கிறோம். நிச்சயமாக அவர்களுக்கு ஒரு நியாயம் கிடைக்கும் சூழலை அரசு உருவாக்கித் தரும் என்ற நம்பிக்கையை தர வந்துள்ளோம்.**

**மேலும் சுர்ஜித்தின் தந்தை கைது செய்யப் பட்டுள்ள நிலையில் விசாரணைக்குப் பின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். இந்த வழக்கை முதல்வர் சி.பி.சி.ஐ. டி.க்கு மாற்றி உள்ளார். நிச்சயமாக யாரையும் பாதுகாக்கும் சூழல் இல்லை. வழக்கில் சம்பந் தப்பட்ட யாராக இருந்தாலும் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள். ஜாதி ஆணவப் படு கொலைக்கு எதிராக சட்டம் இயற்றப்படும் என்று நம்புகிறேன்”.**

இவ்வாறு அவர் கூறினார்.

# தேனி வடக்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி. அறிக்கை!



தேனி, ஆக. 2 -

தேனி வடக்கு மாவட் டக் கழகச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் வழி காட்டுதலின்படி துணை முதலமைச்சர் மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர் களின் அறிவிப்பின்படி தேனி வடக்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் இளைஞரணி ஆலோச னைக் கூட்டம். எனது தலைமையில் இன்று (02 .08.2025 - சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில் தேனி அம்பி வெங்கிட சாமி திருமண மண்டபத் தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு, மாநில, மாவட்ட கழக நிர் வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் கள் ஒன்றிய, நகர் கழக, பேரூர் கழக செயலாளர் கள் மற்றும் இளைஞரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனை வரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு : ஆலோசனை கூட்டத்திற்கு வரும்போது தவறாமல் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மினிட் புத்தகத்தினை கொண்டு வர வேண்டும்.

இவ்வாறு தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி. வேண்டு கோள் விடுத்துள்ளார்.